



திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவரணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் திருத்தணியில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் கலந்து கொண்டு பி.எம்ஸ்ரீ திட்டம், சி.பி.எஸ்.சி பள்ளிகளில் மும்மொழி கொள்கை, உயர்கல்விக்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பை நிறுவமுயலும் VBSA மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக மாணவர் அணி சார்பில் நாளை 23ஆம் தேதி அன்று ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாணவர் அணி நிர்வாகிகள் முரளிசேனா, எழிலரசன், கோபிநாத், டில்லி பாபு,சதிஷ், குணசேகரன், தனராஜ், யுவப்ரியான், விஷ்ணு விக்கி, திவாகர், அன்பு, மாருதிபிரசாந்த், உள் பட பலர் உள்ளனர்.






வாங்க பேசலாம் நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்துகொண்டு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி,வி.ஜெ.சரண், திருநங்கை சாஷா,தோழர்.ருத்ரா,ஜெ.எச்.ஹேம்நாத்,எஸ்.பிரவீன்குமார்,வி.பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மேயர் க.வசந்தகுமாரி,மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன்,பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ்,மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி,மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.எ.சத்திய பிரபு, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி,ரமணிஆதிமுலம்,செ.சுரேஷ்,கி.வேலுமணி,எஸ்.ஜி.கருணகாரன்,இரா.விஜயகுமார் மாநகர மாணவரணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீ.கார்த்திக்,வே.சிவசுப்பிரமணியன், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் குட்டி (எ) தினேஷ்குமார்,பகுதி இளைஞரணியின் அமைப்பாளர் க.மு.சூரியா ஆகியோருடன் GENZ தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### மின் கட்டணம் கணக்கீடு செய்வதில் தாமதம்:மின்கட்டணம் தாறுமாறாக எகிறியது!

## மக்கள் அதிருப்தி - த.வெ.க. அரசின் இலவச 200 யூனிட் வெற்று அறிவிப்பா?

ஈரோடு, ஜூன் 22-

ஈரோடு மாவட்டத்தில் 100 டிகிரிக்கு மேல் கோடை வெயிலில் கொளுத்தி எடுக்கும் நிலையில் அறிவிக்கப்படாத மின்வெட்டால் தவிக்கும் மக்கள் மின்வெட்டு கணக்கீடு செய்வதில் தாமதத்தால் மின் கட்டணம் தாறுமாறாக எகிறிய த.வெ.க. அரசின் 200 யனிட் இலவச மின்சாரம் என்பதுவெற்று அறிவிப்பா என்று மக்கள் குமுறல்.

தவெக தேர்தல் வாக்குறுதியில் பொதுமக்களை குறிப்பாக இல்லத்தரசிகளை மகிழ்விக்கும் வகையில் 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என முதலமைச்சர் விஜய் தேர்தல் களத்தில் பொதுமக்களிடம் வாக்குறுதி அளித்தார் இதனை நம்பி பலரும் தங்கள் வாக்குகளை தவெகவிற்கு பதிவு செய்து விஜயை முதலமைச்சராக பதவியில் அமர வைத்தனர். ஆனால் மக்கள் அறிவிக்கப்படாத மின்வெட்டால் இரவு நேரங்களில் தூங்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு கொண்டிருக்கின்றனர் மேலும் அதிகப்படியான மின்கட்டணம்

பொதுமக்களுக்கு பேரிடையாக அமைந்துள்ளது.

வீடுகளில் இருந்து பணிபுரியும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் உள்ளிட்டோர் பெரிதும் பாதிக்கபடுகின்றனர் அறிவிக்கப்படாத மின்வெட்டு குறித்து துறை அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது அப்போது மின்தடை விவகாரத்திற்கு ஒரு சில இடங்களில் தனி நபர்களின் தவறுகளாலும் திட்டமிட்டு சதி செயல்களாலும் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது தவறு செய்யும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்வெட்டுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மின்சாரத் துறை அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல் குமார் தெரிவித்தார். மின்வெட்டில் இருந்து பொதுமக்கள் மீள்வதற்கு முன்பே அடுத்த பேரிடையாக இரண்டு மாதங்களுக்கு மின்சார கட்டணம் ரூ.800 முதல் 1500 வரை செலுத்தி வந்தவர்களுக்கு மாதம் ரூ.4500 லிருந்து ரூ.5000 ரூ.6000 என மின்சார கட்டணம் தாறுமாறாக உயர்ந்துள்ளது பொதுமக்களை பெரிதும் கவலை கொள்ள வைத்துள்ளது.

இது குறித்து ஈரோடு மாவட்ட பொதுமக்கள் கூறியது

ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதி செல்வம் கூறியது. எனக்கு தறி தொழில் மட்டுமே தெரியும் ஏற்கனவே பல்வேறு காரணங்களால் விசைத்தறிகள் குறைவாக உள்ளது அறிவிக்கப்படாத மின்வெட்டால் தறி ஓட்ட முடிவதில்லை இதனால்

வாழ்வாதாரம் பாதிக்கபடுவது. திமுக ஆட்சியில் மின்வெட்டு இல்லை. இப்போது நினைத்த நேரத்துல கரண்ட் போகுது.

சித்தோடு பகுதியை சேர்ந்த ராஜேஷ் கூறியது கடந்த முறை எனது வீட்டுக்கு மின் கட்டணம் ரூ.2800 வந்தது ஆனால் இந்த மாதம் இரண்டு மடங்கு கூடுதலாக வந்துள்ளது அதாவது இந்த மாதம் மின் கட்டணம் 6000 வந்துள்ளது. எங்க எங்கள் வீட்டில் 3 டியூப் லைட் 2 மின்விசிறிகள் மற்றும் குளிர்சாதன பெட்டி 1, மிக்ஸி1 கிரைண்டர் 1 உள்ளது. இதற்கு எப்படி இவ்வளவு மின் கட்டணம் வந்தது என்றே தெரியவில்லை இது குறித்து கேட்டால் மின்வாரியத்திடம் இருந்து உரிய பதில் ஏதுமில்லை மேலும் எவ்வளவு பயன்படுத்துவது அதற்கு எவ்வளவு கட்டணம் என்று விவரம் எதுவும் மின் கட்டண அட்டைமில் எழுதவில்லை சரியான நேரத்தில் மின்கணக்கீடு செய்தார்களா என்றும் தெரியவில்லை. மீட்டர் பெட்டியில் பழுது ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கக் கூறி இரண்டு மாதங்கள் ஆகியும் பார்க்க வில்லை எங்களைப் போன்ற நடுத்தர குடும்பத்தினருக்கு மிகவும் சிரமமாக உள்ளது இப்படிப்பட்ட சூழ்நிலையில் மின் கட்டண உயர்வு என்பது எங்களுக்கு மிகவும் பேரிடியாக உள்ளது. திமுக ஆட்சியில் முறையான கணக்கீடு, சரியான கட்டண முறை இருந்தது.

நான் பவானி பகுதியைச் சேர்ந்த இன்ஜினியர் வேல்முருகன் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மின்விசிறி, ஏசி பயன்பாடு அதிகமாக உள்ளது. குறிப்பிட்ட யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால் அதிக கட்டணம் வசூலிப்பது போன்ற முறைகளால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் எனவே மானியமோ இலவசமோ இல்லாமல் பயன்படுத்திய மின்சாரத்துக்கு மட்டும் கட்டணம் வசூல் முறையை பின்பற்றினால் அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ளதாக இருக்கும் எனது வீட்டிற்கு கடந்த முறை ரூ.4000 மின்கட்டணம் வந்தது ஆனால் தற்போது 7000 வந்துள்ளது. என்னை போன்றே எங்கள் பகுதியைச் சேர்ந்த பலருக்கு மின் கட்டணம் உயர்வு உள்ளது இது எங்கள் அனைவருக்கும் கடும் அதிர்ச்சியாக உள்ளது பலர் மின்கட்டணம் செலுத்த முடியாமல் விழி பிதுங்கி இருக்கிறார்கள் எனவே மின் கணக்கீட்டை மீண்டும் நடத்தி மின்கட்டணத்தை குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். திமுக ஆட்சியில் இப்படிப்பட்ட குளறுபடிகள் இன்றி தெளிவான மின்கணக்கீடு, மின்கட்டணம் இருந்தது.

நான் கோபி பகுதியைச் சேர்ந்த தமிழரசி புதிய அரசு பொறுப்பேற்றதும் ஒவ்வொரு வீட்டுக்கும் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என அறிவிக்கப்பட்டது எங்கள் வீட்டில் 200 யூனிட்டுக்கும் குறைவாக தான் மின்சாரம் பயன்பாடு இருக்கும் இதன் காரணமாக எப்போதாவது தான் மின் கட்டணம் வரும் ஆனால் இந்த மாதம் 284 மின்கட்டணம் வந்துள்ளது. இதைக் கண்டதும் எங்களுக்கு அதிர்ச்சியாக உள்ளது. ஏசி, குளிர்சாதன பெட்டி, கிரைண்டர் போன்ற மின்சாதன பொருட்கள் ஏதும் இல்லாத நிலையில் எப்படி இந்த கட்டணம் வந்தது என்று தெரியவில்லை அரசு இலவச திட்டங்களை கொண்டு வந்தாலும் அதனை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலைதான் தற்போது உள்ளது எனவே மின்சார வாரியம் வெளிப்படை தன்மையுடன் செயல்பட புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த திமுக ஆட்சியில் சொல்வது வேறு செய்வது வேறு என்று இல்லாமல் தேர்தல் அறிக்கையில் சொன்னது செய்தார்கள்

நான் சக்தி பகுதியைச் சேர்ந்த இல்லத்தரசி சக்தி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்தடை தினந்தோறும் நடைபெறுகிறது இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர் கோடை காலத்தில் மின்சாரம் இல்லாமல்கடுமையாக அவதிப்படுகிறோம் மேலும் சமையல் செய்வதிலும் சிரமம் ஏற்படுகிறது தற்போது மின்சார கணக்கு எடுப்பதற்கு காலம் தாழ்த்தப்படுகிறது இதன் காரணமாக மின் கட்டணம் தாறுமாறாக உயர்ந்து வருகிறது இதனால் ஏழை, நடுத்தர மக்கள் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது எனவே உரிய நேரத்தில் மின்கட்டணம் கணக்கெடுப்பு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மேலும் அடிக்கடி மின் தடை ஏற்படுவதை தடுக்க வேண்டும். திமுக ஆட்சியில் பாடுபட்டு வந்தவர்கள் இரவில் நிம்மதியாக தூங்கினார்கள். இப்போது தொழில் பாதிப்பு, தூங்க முடியாத நிலை, மின்கட்டண உயர்வு என மக்கள் அவதிபடுகிறார்கள்.

---

திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்

## வீரா.தேசபந்து மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜீன் 22-

திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா. தேசபந்து நேற்று முன்தினம் (20.06.2026-சனிக்கிழமை) முக்குளம்சாத்தனூரில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. கோவிந்தசாமி
### ஜூன் 22 (2002)



கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் 'சாது' கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### கண்ணம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி 10 வயது வடமாநில பெண் குழந்தை மாயம்!

## ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கப்பெண் படை என்ன செய்கிறது?

### கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் கேள்வி!



கோவை, ஜூன் 22-

சூலூர் கண்ணம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி 10 வயது வடமாநில பெண் குழந்தை மாயம், ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கப்பெண் படை என்ன செய்கிறது? என கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவை மாவட்டம் சூலூர் வட்டம் கண்ணம் பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்து வரும் 10 வயது வடமாநில பெண் குழந்தை ஜூன் 21 ஆம் தேதி நேற்று முதல் காணவில்லை என புகார். தேடிக்கொண்டிருக்கிறோம், தேடிக்கொண்டிருக்கிறோம்! இது தான் காவல் துறையின் பதில்.

கடந்த மாதம் 21ம் தேதி இதே சூலூர் பகுதியில் 10 வயது பெண் குழந்தை கயவர்களால் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு உயிரிழந்து தமிழ் நாட்டை உலுக்கிய நிகழ்வில் இருந்து தமிழ் நாடு இன்னும் விடுபடவில்லை!

அதேபோல கடந்த மூன்று நாட்களுக்கு முன்னதாக சென்னையில் 3 வயது வட மாநில பெண் குழந்தை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி சிதைக்கப்பட்டு இறந்த சம்பவம் இன்றும் நெஞ்சை விட்டு அகலாமல் தமிழக மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது!

ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கப்பெண் படை என்ன செய்கிறது!

சிங்கப்பெண் என்பது மக்களை ஏமாற்ற ஒரு 'ஷூட்டிங்' ஏற்பாடு மட்டும் தானா!

இங்கு குழந்தைகள் முதல் பாட்டிகள் வரை அனைவரின் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை! கற்புக்கும் பாதுகாப்பு இல்லை!

கடந்த தி.மு.க. ஆட்சியில் மாவட்ட முழுவதும் காவல்துறை கண்காணிப்பு (VISUAL) ரோந்து சுற்றி வந்த காரணத்தினால் இந்த மாதிரி குற்றங்கள் கோவை மாவட்டத்தில் இல்லை.

அன்று இன்றைய முதலமைச்சராக இருக்கும் விஜய் அவர்கள் அன்றைய முதலமைச்சரை பார்த்து சிம் சார் என கொக்கரித்தவர்கள் இன்று வாய் மூடி மௌனியாகி விட்டனர்!

நடக்கிறதா ஆட்சி! இருக்கிறதா காவல்துறை என மக்கள் கேள்வி கணைகளால் துளைக்க ஆரம்பித்து விட்டனர்!

கடந்த தி.மு.க. ஆட்சியில் பல்லடத்தில் ஒரு சம்பவம் நடந்தவுடன் உடனே செயல்பட்ட திராவிட மாடல் ஆட்சி!

காவல்துறை தோட்ட சாலையில் வசிப்பவர்கள் இடத்திலும், அரசு பள்ளிகளுக்கும் சென்று அறிவுரைகளை கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த ஆட்சியில் எந்த நடவடிக்கையும் இல்லை! எந்த பாதுகாப்பும் இல்லை!

பெயருக்கு சிங்கப் பெண் படை! நாள்தோறும் பெண் குழந்தை காணவில்லை! கற்பழிப்பு ! கொலை! தி.மு.க. ஆட்சியில் அத்தி பூத்தாற்போல் நடந்த சம்பவங்கள் இன்று அன்றாட காட்சி ஆகிவிட்டன!

கண்ணம்பாளையத்தில் காணாமல் போன 10 வயது மதிக்கத்தக்க பள்ளி குழந்தையை போர்க்கால அடிப்படையில் மீட்டு எடுக்காவிட்டால் மீண்டும் ஒரு பாலியல் சம்பவம் நடக்க இடம் கொடுத்ததாக ஆகிவிடும்.

தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்தபோது கொந்தளித்த இன்றைய முதல்வர் அவர்கள் இப்போது கொஞ்சமாவது பொறுப்புணர்ந்து தலையிட்டு இந்த குழந்தையை மீட்டு தமிழகப் பெண்களுக்கும், வட மாநில பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பை உறுதி செய்திடவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

---





வடசென்னை முன்னாள் மாவட்டச் செயலாளர் எல். பலராமன் அவர்களின் 83 வது பிறந்தநாள் விழா மற்றும் அவரது 6வது நினைவு நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி நேற்று ( 21.06.2026) மதியம் சென்னை வியாசர்பாடி நெடுஞ்சாலையில் உள்ள அவரது பாரத் பெட்ரோலியம் பெட்ரோல் பங்க் வளாகத்தில் அன்னாரது மகன் எல்.பி.பாபு மற்றும் பேரன் எல்.பி.பி.நவீன் ஆகியோரின் ஏற்பாட்டில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அதுபோது முன்னாள் 78 அ வட்ட கழக செயலாளர் சூளை ஆர். புருஷோத் தமன், சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் வழக்கறிஞர் திராவிடன் விஜய்போஸ், சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் லண்டன் முருகன், ஆர். கே. நகர் பகுதி பொருளாளர் கே. பி. சத்தீஷ் குமார், ஆர்.கே. நகர் எல்.பி.எப். பாபு, சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பு சாரா பிரிவு பி.எம்.மலையப்பன், முகமது ஆசிப், தத்துவம் ஆசிப் மற்றும் கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






பம்மல் வடக்குப் பகுதி – 4வது வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் மு.நி. தமிழ்குமரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். இதில் கே. சந்திரன், மு. ஸ்ரீதர், க. ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச. பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.